பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# 'சோளகர் தொட்டி' புதினம் வழி பழங்குடி சோளகர்களின் இயற்கைசார் வாழ்வியல்

**முனைவர் ஆ. ஆன்றோ நிஷாந்தி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு. கன்னியாகுமரி - 629 174, மின்னஞ்சல் : antonishanthi1988@gmail.com ORCID : https://orcid.org/0009-0005-8903-4745

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்கள் சமூகத்தின் பல்வேறு பரிமாணங்களைப் பதிவு செய்யும் முக்கியமான ஊடகமாக விளங்குகிறது. அந்த வகையில், விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் உரிமைப் போராட்டங்களையும் பதிவு செய்யும் படைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ச.பாலமுருகன் எழுதிய சோளகர் தொட்டி புதினம் பழங்குடியின மக்களாகிய சோளகர்களின் வாழ்வியலை உண்மை நிலையுடன் சித்தரிக்கும் சமூகப் புதினமாகும். சோளகர்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிணைந்ததாக உள்ளது. காட்டை தாயாகக் கருதி வாழும் இம்மக்களின் அன்றாட வாழ்க்கை, தொழில், உணவு, சடங்குகள், நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டு முறைகளைப் பகுப்பாய்வு செய்யும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்** : சோளகர் தொட்டி, பழங்குடிகள், ச.பாலமுருகன், வேட்டையாடுதல், இயற்கைசார் வாழ்வியல்

## முன்னுரை

மனித சமூகவியல் வரலாற்றில் பழங்குடியினர் முக்கியமான இடத்தைப் பெறுகின்றனர். பல நிலைகளில் மாற்றங்களை ஏற்று வாழும் மனித சமூகத்தில் பழங்குடி மக்கள் நாகரிக உந்துதல்களுக்கு ஆட்படாமல் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களாகிய சோளகர்கள் தமிழக கர்நாடக எல்லைப் பகுதியிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக் கிராமமாகிய தொட்டியில் வாழ்பவர்கள். ஆண்டாண்டு காலமாக காட்டை ஆண்ட சோளகர் இன மக்களின் கதறல்களை காட்டிற்கு வெளியே பேசும் நூல் சோளகர் தொட்டியாகும். ச.பாலமுருகன் எழுதிய 'சோளகர் தொட்டி' புதினம் தமிழ் இலக்கியத்தில் சமூக உணர்வை வலுப்படுத்தும் முக்கியப் படைப்பாகும். இப்படைப்பின் வழி பழங்குடிகளான சோளகர்களின் இயற்கையோடு இணைந்த வாழ்வியலை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

## பழங்குடிகள்

பழங்குடி எனும் தமிழ்சொல் 'வுசா்டிந' என்ற ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். நாகரிகத்தில் பின் தங்கியவர்களை வுசா்டிந என்பர். "பழங்குடி என்னும் பொருளுடையச் சொல் முதன் முதலில் எபிரேயர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது". (பண்பாட்டு மானிடவியல், ப.297) பழங்குடியினர் என்பதற்கு இனக்குழு மக்கள், மலைவாழ் மக்கள், ஆதிவாசி மக்கள், பூர்வீக குடிகள், மூத்தக் குடிகள் என்றும் குறிப்பிடுவர். பழமையான வாழ்க்கை முறையும், குடி அமைப்புகளையும் கொண்டுள்ளதாலும், மக்கள் தொடர்பின்றி காடுகளில் வாழ்வதாலும் இச்சமூகத்தை பழங்குடிகள் என அழைத்திருக்கக்கூடும். பழங்குடி மக்களை அவர்கள் பேசும் மொழி, பின்பற்றும் சமயம், வாழ்க்கைக்குவேண்டியவற்றை ஈட்டிக் கொள்கின்ற முறை போன்றவற்றைஅடிப்படையாகக் வைத்து வகைப்படுத்துவர். பளியர், இருளர், தோடர், கோத்தர், குறும்பர், தொதுவர், முடுகர்,சோளகர், கோடர், மலையாளிகள் எனப் பல்வகை பழங்குடியினர் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்றனர்.

## சோளகர்

சோளர் என்றால் காடு ; காட்டில் வாழும் மக்கள் என்பதால் சோளகர் என்று பெயர் பெற்றனர் என்பதை *"சோலைகளை ஆண்டதால் சோளகர்" (சோளகர் தொட்டி, ப. 101)* என்பதன் மூலம் அறிய முடிகிறது. சோளகர் மக்களின்

வசிப்பிடம் 'தொட்டி' ஆகும். தொட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்ட குடிசைகளில் சோளகர்கள் வாழ்ந்து வந்தனர். தொட்டிக்கு தலைவனாக இருப்பவனை 'கோல்காரன்' என்று அழைக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களாகிய இவர்கள் தங்களுக்கென எந்தவொரு அடையாளமும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். *"ஆலார் குலம், பௌ;ளர் குலம், சூரிய குலம், ஓங்களூர் குலம், சௌக்கியர் குலம்" (சோளகர் தொட்டி ப.44)* என சோளகர்கள் தங்களை ஐந்து குலங்களாகப் பிரித்துள்ளனர். காடுகளில் தேன் சேகரித்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல் மற்றும் வேளாண்மை செய்தல் போன்றவை இவர்களின் முக்கியத் தொழிலாகும்.




**உணவு**

மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவாகும். மனித உயிர்களுக்கு புத்துணர்வு அளித்து உடலுக்குத் தேவையான சத்துக்களை வழங்குவது உண்ணும் உணவே யாகும். உணவு என்ற சொல்லுக்கு வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உரை, ஊட்டம் என்ற பலப்பெயர்களால் வழங்கப்பட்டு வந்துள்ளன. இதனை,

*"உணவே வல்சி யுண்டி யோதன*
*மசனம் பதமே யிரை போகார*
*உரை யூபட முணவென லாகும்" (பிங்கல நிகண்டு சூ. 153)*

எடுத்துரைக்கிறது. ஒரு சமூகத்தின் அல்லது இனக்குழுவின் வசதியின் அடையாளமாகவும் உணவு மாறிவிட்டது. சோளகர்கள் ராகி (கேழ்வரகு), காய்கறிகள், கிழங்குகள், வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சி போன்றவற்றை உணவாக உட்கொள்ளுகின்றனர்.

**ராகி (கேழ்வரகு)**

ராகி என்பது கேழ்வரகு, கேப்பை என அழைக்கப்படும் ஒரு சத்தான சிறுதானியமாகும். சோளகர்களின் பிரதான உணவாக ராகி உள்ளது. அத்துடன் ஏதேனும் காய்கறிகளைச் சேர்த்து உட்கொள்வார்கள். *"சூடாகி யிருந்த உலை நீரில் தண்ணீர் ஊற்றப்பட்டு, பின் கொதிக்கும் போது சிக்கைய தம்பிடி கொண்டு வந்திருந்த ராகி மாவு சேர்த்து சிறிது நேரத்திற்குள் சூடான களி தயாரிக்கப்பட்டு, தேக்கு இலைகளை இணைத்து மெல்லிய மூங்கில் கம்பால் தைக்கப்பட்ட ஜோட்டில் களியும், அவரைக் குழம்பும் தொட்டுக் கொண்டு உண்ணத் துவங்கினார்கள்"(சோளகர் தொட்டி ப.99)* ராகி களி, ராகி கஞ்சி மற்றும் ராகி அடை ஆகியன சோளர்களின் அன்றாட உணவாக இருந்தது.

**ஊன் உணவு (இறைச்சி)**

உணவுக்காக வேட்டையாடுதல் தொல்பழங்குடியினரின் அன்றாடப் பழக்கமாக இருந்தது. சோளகர்கள் வேட்டையாடி கிடைக்கும் முயல், மான், கரடி போன்ற விலங்குகளின் இறைச்சியை காய்கறிகள் மற்றும் உப்பு சேர்த்து சமைத்து உண்டனர். *"கொத்தமல்லி தண்ணீர் கொதிக்கும் சப்தம் கேட்டு, கொண்டு வந்திருந்த மான் கறியைக் கழுவி சட்டியில் போட்டான். பின் அவரைக்காய்களையும், கத்தரிக்காயையும், மிளகாயையும் உப்புடன் சேர்த்து கறியினை சுவையேற சட்டியில் இட்டான்" (சோளகர் தொட்டி. ப. 31).* சோளகர்கள் சமைக்கும் போது எந்தவொரு மசாலாக்களையும் சேர்ப்பதில்லை என்பதை *"மசாலாக்களைப் பக்குவமாகச் சேர்த்து எந்த தொட்டிக்காரன் கறி சமைக்கப் பழகியிருக்கிறான். வெறுமனே கறியை வேக வைத்து அதில் மிளகாய், காய்கறிகளை உப்புடன் சேர்த்து வதக்கி சமைத்ததை உண்டு*

*பழகியவர்களுக்கு மசாலாவின் கிராம்பு மணம் இதமாயிருந்தது" (சோளகர் தொட்டி ப. 16)* என்பதன் மூலம் புலப்படுகிறது.

**உப்புக் கண்டம்**

இறைச்சியை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்க செய்யப்படும் பாரம்பரிய முறை உப்புக்கண்டமாகும். தொட்டியிலுள்ள மக்கள் இறைச்சி அதிகமாக இருந்தால் உப்புக்கண்டம் போட்டு தேவைப்படும் போது பயன்படுத்துவர் என்பதை *"இந்த கறியை உப்புக்கண்டம் போட்டு வைத்தால், விருப்பம் வரும் போது எடுத்துச் சமைக்கலாம்" (சோ. தொ ப. 29)* என்பதன் மூலம் அறியலாம். *"உப்புக்கண்டமிட்டு ஊற வைத்திருந்த கரடியின் மாமிசத்தைக் கயிற்றில் சரம் போலக் குடிசைக்கு முன்பாக தோரணமாய் மூங்கில் கம்பில் கட்டி வெய்யிலில் காய்வதற்காக கட்டி வைத்தான்" (சோளகர் தொட்டி ப.38)* இதுவே உப்புக்கண்டம் போடுவதற்கான முறையாகும்.

**கிழங்கு வகைகள்**

சோளகர் மக்கள் காட்டில் கிடைக்கும் கிழங்கு வகைகளை உணவாகப் பயன்படுத்தினர். சோளகப் பெண்கள் வீட்டிலிருக்கும் தானியங்கள் தீர்ந்து வரும் போது காட்டிற்கு சென்று வள்ளிக்கிழங்கு, சர்க்கரைக்கிழங்கு போன்றவற்றை தோண்டியெடுத்து வந்து வேக வைத்து சாப்பிட்டனர். *"தோண்டி எடுக்கப்பட்ட வள்ளிக்கிழங்கினையும், குட்டி யானையின் கால் போல வட்ட வடிவில் சிகப்பாகயிருந்த பூமி சக்கரைக்கிழங்கையும் எடுத்து வந்து அந்தக் கிழங்கின் தோலை நீக்கி நீரில் வேக வைத்து, அதில் உப்பு பிசைந்து உட்கொண்டு அவர்களின் பசியைப் போக்கிக் கொண்டனர்" (சோளகர் தொட்டி ப. 47.)*

**வேளாண்மை**

உணவை உற்பத்திச் செய்யும் தொழிலாய் கற்காலம் முதல் தற்காலம் வரை வேளாண்மை திகழ்கிறது. உழவின் மேன்மையை *"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்" (குறள். 1031)* என்றார் வள்ளுவர். சோளகர்களுக்கு வேளாண்மையே முதன்மைத் தொழிலாக இருந்தது. சோளகர்கள் வேளாண்மை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடம் *"சீர்காடு" (சோளகர் தொட்டி.. ப. 55)* ஆகும். தொட்டிக்கு கிழக்கே சீர்காடு உள்ளது. ஆடி பிறக்கும் போது விதை விதைத்தால் நல்ல விளைச்சல் வரும் என்ற நம்பிக்க சோளகர்களிடம் உண்டு. "பூமியை கைகளால் கொத்து கொண்டு கொத்தி மண்ணைக் கிளறி ஆடிப்பட்டத்தில் ராகி தூவத் தயாராய் இருந்தார்கள் (சோளகர் தொட்டி.. ப5) பயிரிடுதலைச் சுழற்சி முறையில் செய்தனர். விதை விதைக்கும் போது பெண்கள் மூங்கில் கூடையில் ராகி விதையை எடுத்துச் சென்று,

*"காத்தவர் தின்னது போக....*

*கண்டவர் தின்னது போக ....*

*கள்ளர் தின்னது போக ....*

*விளையணும் .... விளையணும் சாமி*

*(சோளகர் தொட்டி ப. 55)*

என்று இறைவனை வேண்டி விதையைத் தூவுவர். விதைக்கான தானியங்களை காணாம் புல்லில் செய்த குதிரில் பாதுகாத்து வைப்பர். மேலும் அறுவடைக்குப் பின் காய வைத்து எடுக்கப்பட்ட ராகி தானியக் கதிர்களை குத்தாரி அமைத்துப் பாதுகாத்தனர். *"தரையில் கருங்கற்களைப் பரப்பி, தளமாக்கிய பின் மூங்கில் படல்களை நிறுத்தி வைத்து அதில் கதிருடன் ராகித் தட்டுக்களை ஆள் உயரம் அடுக்கி வைப்பர். அதைச் சுற்றிலும் குதிரைவாலிப் புற்கள் குடிசை போல் வேய்ந்திருந்தன. அதன் நெருக்கலான பின்னல்களால் மழை நீர்ப்புகாமலும் பூச்சி அரிக்காமலும் தானியம் பாதுகாக்கப்பட்டது (சோளகர் தொட்டி ப. 14)* இதனை 'குத்தாரி' என்று சோளகர்கள் குறிப்பிடுகின்றனர்.

**வேட்டையாடுதல்**

இனக்குழு சமுதாயத்தில் வேட்டையாடி உணவு சேகரித்தலே முதன்மையான உணவாதாரமாக இருந்தது. சோளகர்கள் வேட்டையாட நாட்டு துப்பாக்கிகள் மற்றும் வேட்டை நாய்களைப் பயன்படுத்தினர். சோளகன் வேட்டைக்கு போகும் போது துப்பாக்கியில் *"கரி மருந்து செலுத்தி, பின் அதன் முனையில் பட்டாசு கேப் வெடியை வைத்து திணித்து வைப்பான்" (சோளகர் தொட்டி ப.36).* இவர்களால் வேட்டை யாடப்படும் விலங்குணவு தொட்டியில் கூறு செய்து பகிர்ந்துண்ணப்பட்டது. "தொட்டியில் மான்கறி விரும்புபவர்களுக்குத் தனித் தனிக் கூறாக கறியை எடுத்து வைத்தார்கள். முதல் கறிக்கூறு விதவைப் பெண்ணுக்கு" (சோளகர் தொட்டி ப.28) வழங்கப்படும். *"வேட்டைச் சமூகத்தில் பகுத்துண்ணுதல் கூட்டு வாழ்வின் விழுமியமாக (அறமாக) இருந்துள்ளது. இது ஓர் உலகளாவிய பண்பாகும். இது எல்லா வேட்டைச் சமூகங்களிலும் காணக் கூடியதாக உள்ளது".*

*(சங்கக் காலத் தமிழர் உணவு, ப. 41)* என்கிறார் மானிடவியல் ஆய்வாளர் பக்தவத்சலபாரதி. சோளகர்கள் விலங்குகளை வேட்டை யாடியதை வனக்காவலர்கள் கண்டறிந்தால் வழக்கு தொடுத்து தண்டனையும் வழங்கப்படுகிறது. இதனால் மானை வேட்டையாடிய போது, *"சிவண்ணா அவசரமாக மானின் தோலையும், அதன் எலும்பையும் எடுத்துப் போய் ஆழமான குழியைத் தோண்டி அவற்றைப் போட்டு மூடினான். மானின் தோல், மானைக் கொன்ற விவரத்தைச் சில நாட்கள் கழித்தேனும் காட்டிக் கொடுத்து விடும் வனக்காவலர்கள் மூக்கு வியர்த்து வந்து நிற்பார்கள்" (சோளகர் தொட்டி ப.28)* என்பதால் தொட்டியினர் ஜாக்கிரதையாக இருந்தனர்.

**திருமணம்**

சோளகர் இனமக்கள் பெரும்பாலும் தங்கள் இனத்திற்குள்ளாகவே திருமணம் செய்து கொள்கின்றனர். மேலும் அவர்கள் வயது பார்த்து திருமணம் செய்து கொள்வதில்லை. பெண் ஆணை விட இளையவளாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. *"எனது இளையவனை இவளுக்கு மணம் முடிக்க முடியாது. அவன் கெம்பம்மாளை விட ஏழு வயது சிறியவன் கோல்காரன் கத்தினான். கூட்டத்தினர் சிரித்தனர். கொத்தமல்லி கோல்காரனிடம், எப்போது வயது பார்க்கும் முறை நம் தொட்டியில் வந்தது? என்றான்" (சோளகர் தொட்டி ப. 5)* இதிலிருந்து வயது பார்க்கும் வழக்கம் சோளகர்களிடம் இல்லை என்பது புலனாகிறது. சோளகர்கள் பெண் பார்க்க வருவதை 'விதை தானியம் கேட்டு வருதல்' என்பர். பெண்ணுக்கு பரிசம் போட ஆண் வீட்டாரிடம் பணம் கேட்கும் முறை தொட்டியில் உண்டு. *"பெண்ணுக்கு பரிசம் போடப் பணம் எவ்வளவு தருகிறான் கோல்காரன் என்று ஜோகம்மாள் கேட்டாள்" (சோளகர் தொட்டி ப.66)* கணவன் இறந்தாலும், கணவனை பிடிக்காவிட்டாலும் வேறு கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான சுதந்திரத்தை பெண்களுக்கு இச்சமூகம் வழங்கியிருந்தது.

**திருமணச்சடங்கு**

திருமணப்பந்தல் பெண்ணின் குடிசை வாசலில் இடப்படும். *"வெள்ளை நாகமரத்தின் ஒன்பது கவைக்குச்சிகளையும், ஒன்பது பச்சை மூங்கில்களையும் சேர்த்து ஆள் உயரத்தில்" (சோளகர் தொட்டி ப. 67)* பந்தல் போடுவர். அந்தப் பந்தலின் மேல் பரப்பு முழுவதும் நாகமரத்தின் இலைகளை நிரப்பி வைப்பர். மணமக்கள் இருவருக்கும் தலையைச் சுற்றி நறுமணம் பரப்பும் காட்டு மல்லிகையினைச் சரம் போல கட்டி தோள்கள் வரை தொங்கவிட்டு அலங்கரிப்பர். பீனாச்சி மற்றும் தப்பு இசைக்கப் பட்டு மாப்பிள்ளை ஊர்வலமாக பெண் வீட்டிற்கு அழைத்து வருவர். மூங்கில் தட்டில் சேலை, கண்ணாடி, சீப்பு, வெற்றிலைப்பாக்கு, தாலி ஆகியவற்றை மாப்பிள்ளை வீட்டார் எடுத்து வருவர். நாக இலைப்பந்தலில் மணமகனை உட்கார வைத்து மணப்பெண் தோழி, அவனது முகத்தில் கருப்பு, வெள்ளை பொட்டுக்களை வைத்து சடங்கு செய்வார். பின்பு மூங்கிலால் செய்யப்பட்ட உழக்கில் குப்பைகளை வைத்து மணமகனை *"உழக்கை பார்க்காமல் வந்து பின்னங்காலில் அதனை மூன்று முறை உதைக்கும் படி செய்தார்கள் குப்பைகள் கீழே கொட்டியது" (சோளகர் தொட்டி ப.67)* இது 'திருஷ்டி கழித்தல்' என்ற சடங்காகும். அடுத்ததாக மணமகளின் குடிசைக்குள் சென்று மணமகனின் சுண்டுவிரலோடு, மணமகள் சுண்டுவிரலைச் சேர்த்து பந்தலுக்கு அழைத்து வருவர். கோல்காரனால் பூஜை செய்யப்பட்டு தாலி கட்டும் நிகழ்வு நடைபெறும். பின் மணமகளின் தாய்மாமன் மணமகனுக்கு *"அரிசிச் சோற்றையும் வெல்லத்தையும், புளியங் கொட்டையையும் சேர்த்து சமைத்த" (சோளகர் தொட்டி ப. 68)* உணவினை ஊட்டுவார்.

**திருமண விருந்து**

தினமும் வரகினால் செய்த உணவுகள், காய்கறிகள், கிழங்குகள் முதலியவற்றை மட்டும் உண்ணும் சோளக மக்கள் திருமண விருந்தின் போது மட்டுமே கிடைக்கும் அரிசி உணவை விரும்பி உண்ணுகின்றனர். *"அரிசிச் சோறுடன், ஆட்டுக்கிடாயின் குழம்பின் மணமும் தொட்டியினுள் உள்ளவர்களின் நாவில் எச்சிலை ஊறச் செய்தது. தேக்குமர இலைகளைச் சிறு குச்சிகளால் பிணைத்து உருவாக்கப்பட்டிருந்த இலையில் அரிசிச் சோறும், காரமான ஆட்டுக்கறிக் குழம்பும் பரிமாறப்பட்டது. ஆர்வத்துடன் அந்த உணவை ஒரு பருக்கை கூட விடாமல் சுவைத்தனர். அரிசி உணவு சாப்பிடுவது வருடத்தில் எப்போதாவது நிகழ்வது என்பதால் அதனை வாயில் அசை போட்டுச் சுவைத்து விழுங்கினார்கள்" (சோளகர் தொட்டி ப. 69).* மீதமுள்ள உணவை சூடு செய்து மீண்டும் பரிமாறுவார்கள்.

**பொழுதுபோக்கு**

மனிதர்கள் தங்களின் அன்றாடப் பணிகளுக்குப் பின் ஓய்வு நேரத்தை செலவழிக்க நினைத்த பொழுது பொழுதுபோக்கு உருவானது. சோளகர் மக்களின் ஒரே பொழுதுபோக்கு பீனாச்சி, தப்பை, மத்தளம் போன்ற இசைக்கருவிகளை இசைத்து ஆண்களும், பெண்களும் இணைந்து நடனம் ஆடுவதேயாகும். இரவு பனிபொழிவதால் ‘உக்கடத்தீ’ போட்டு *“தொட்டியினர் சிலர் முதுகையும் வேறு சிலர் கைகளை முன்னே நீட்டியும் உக்கடத் தீயில் காட்டியபப்படி கூதல் காய்ந்தார்கள்” (சோளகர் தொட்டி.. ப. 16)* அப்போது சோளக ஆண்கள் இசைக்கருவிகளான நாதஸ்வரத்தை விட சிறிய பினாச்சியையும், தப்பை மத்தளத்தையும் வாசிக்க *“அந்த இசையில் பெண்கள் நெருப்பைச் சுற்றி வட்டமாகக் கும்மியடிப்பது போல இடுப்பை வளைத்து ஆடுவர்” (சோளகர் தொட்டி ப. 17).* இவ்வாறு மகிழ்ச்சியாக பொழுதுபோக்கும் போது ஆண்கள் போதைக்காக கஞ்சாவினை பயன்படுத்துவர்.

**வழிபாடு**

சோளகப் பழங்குடிகள் இயற்கையை வழிபடும் பழக்கமுடையவர்கள். தங்களை வாழ வைக்கும் மலையையும், வனத்தையும் தெய்வமாகப் போற்றுகின்ற பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. *“அவங்களுக்கு மலையும், வனமும், மரமும் சாமியில்லை. ஆனா, நமக்கு அதுதான் சாமி” (சோளகர் தொட்டி ப. 134).* இவர்கள் வனங்களில் சிறு தெய்வங்களான ஜடைசாமி, மாதேஸ்வரன், மணிராசன், எங்குசீர்குட்டை போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர்.

**ஜடைசாமி கோயில்**

ஜடைசாமியின் கோயில் சோளகர்களின் வனத்திற்குள் இருந்தது என்பதை. *“வனத்தில் இருக்கும் ஜடைசாமி கோயிலைக் காட்டச் சொன்னான்” (சோளகர் தொட்டி ப. 195).* என்பதன் மூலம் அறியலாம்;. சோளக மக்கள் தங்களுக்கு நல்லது நடக்கும் போது நன்றிக் கடனை வெளிப்படுத்துவதற்காக படையலிட்டு ஜடைசாமியை வழிபடுவர். புட்டனின் மனைவி ஈரம்மாவிற்கு சுகப்பிரசவம் ஆனதால் கொத்தமல்லி, *“உன் மனைவி மறுபிறவி எடுத்து விட்டாள். ஜடைசாமி உன் மனைவிக்காக கண் திறந்து குழந்தையை வெளியே தள்ள உதவியுள்ளான். கடவுளுக்கு நீ படையல் செய்து நன்றி செய்து கொள் என்றான்” (சோளகர் தொட்டி .ப. 21).* ஜடைசாமிக்கு படையலாக ராகி களியும், அவரைக் குழம்பும் வைத்து வழிபடுவர். *“ஜடைசாமிக்கு காட்டு மல்லிப்பூமாலையால் அலங்கரிக் கப்பட்டது. களி கிளறி இறக்கி வைத்துவிட்டு, அவரைக் குழம்பு அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்தது” (சோளகர் தொட்டி .ப. 232).*

**மாதேஸ்வரன் கோயில்**

சோளக மக்கள் படகலிலுள்ள மாதேஸ்வரன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்கின்றனர். *“மாதேஸ்வரக் கடவுள் சுயம்புவாக படகல்லில் இருந்த பாறையைப் பிளந்து உருவாகியிருந்தது” (சோளகர் தொட்டி .ப. 86)* அதிகமான விளைச்சல் கிடைக்கும் போது சோளகர்கள் படையல் போடுவதற்காக ராகி தானியத்தை மூட்டைக் கட்டி தலையில் சுமந்து கொண்டு மாதேஸ்வரன் கோயிலுக்கு செல்வார்கள்.

**மணிராசன் கோயில்**

தொட்டியிலிருந்த மணிராசன் கோயிலில் மணிராசன் கழுத்தளவு சிலை மரத்தால் செதுக்கப்பட்டிருந்தது. மீசையை முறுக்கிக் கொண்டு திறந்த கண்களுடன் இருக்கும் மணிராசனிடம் தொட்டியினர் தங்கள் மனக்குறையை நேரிடையாக பேசி அழுவார்கள். இம்மக்கள் *“மணிராசன் குடிகளைக் காக்க தினமும் இரவில் வலம் வருவான்” (சோளகர் தொட்டி..ப. 34)* என்று நம்பினார்கள். மணிராசன் கோயில் திருவிழாவில் இரவு பூஜையானது இறந்தவர்களை சாந்தப்படுத்துவற்காக நடத்தப்படுகிறது. அந்த வருடத்தில் இறந்தவர்களது குடும்பத்தினர், இறந்தவனின் குழியைத் தோண்டி ஒரு சில எலும்புகளை எடுத்து வந்து, மணிராசன் கோயில் முன்னிருக்கும் கெப்பைக்குழி எனும் எலும்புக்குழியில் போடுவர். *“எலும்பு கெப்பைக்குழியில் விழும் போது தான் இறந்தவன் சமாதானமடைகிறான்” (சோளகர் தொட்டி ப. 32)* என்று சோளக மக்கள் நம்புகின்றனர். இந்த இறந்தோருக்கான வழிபாட்டு சடங்கானது சோளகர் வழிபாட்டு மரபில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**எங்குசீர்குட்டை வழிபாடு**

சோளகர்கள் தங்கள் பூமியில் மழை பெய்ய வேண்டி எங்குசீர்குட்டை என்ற பெண் தெய்வத்தை வழிபடுகிறார்கள். தாண்ரி மரங்கள் அடர்ந்த வனத்தில் சோளகப் பெண்களால் இவ்வழிபாடு நடத்தப்படுகிறது.*“மழை வேண்டி*

*பிரார்த்திக்க வேண்டிய கடவுளான எங்குசீர்குட்டைக்கு பூஜை செய்யலாம்" (சோளகர் தொட்டி .ப.47)* என்பதற்காக தொட்டியிலுள்ள பெண்கள் அனைவரும் வீட்டிலுள்ள தானியத்தில் உணவு தயாரித்து மூங்கில் கூடை அல்லது முறத்தில் எடுத்துக் கொண்டு வனத்திற்குச் செல்வர். தொட்டி ஆண்கள் அனைவரும் மணிராசன் கோயிலில் நின்று பெண்களை வழியனுப்புவர். தாண்ரி மரங்கள் அடர்ந்த வனத்தில் இப்பெண்கள் உடைகளைக் களைந்து நிர்வாணமாக நின்று வானத்தைப் பார்த்து "மழை பொழி தாயே" என்று வேண்டி கும்மியடிப்பர். பெண்கள் நிர்வாணமாக நின்று கும்மியடித்து மழை தெய்வத்தை வேண்டினால் மழை பெய்யும் என்று சோளகர்கள் நம்புகின்றனர்.

**முடிவுரை**

சோளகர் தொட்டி புதினம் பழங்குடி மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.சோளகர் சமூகத்தின் உணவு, பழக்க வழக்கங்கள், சடங்குகள், வழிபாடுகளை இப்புதினத்தின் வழி படம் பிடித்து காட்டியுள்ளார் ச.பாலமுருகன். எழுத்தாளர் மிக எளிய மொழியில் ஆழமான சமூக உண்மைகளை வெளிப்படுத்தியிருப்பது இந்நூலின் சிறப்பாகும். சோளகர் மக்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை இவ்வாய்வினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

துணை நூல் பட்டியல்

1. பக்வத்சல பாரதி, சங்ககாலத் தமிழர் உணவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2021
2. பக்வத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2016.
3. பாலமுருகன்.ச, சோளகர் தொட்டி, எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2013.

*****